## கடந்த 3 ஆண்டுகளில் ரூ. 27 ஆயிரம் கோடியில் 371 அறிவிப்புகள்!

# 2 கோடியே 59 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்!

## சட்டப் பேரவையில் வேளாண்மை – உழவர் நலத்துறை மானியக் கோரிக்கையில்

## 30 அறிவிப்புகளை வெளியிட்டு – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரை!

**சென்னை, ஜுன் 25-**

**கடந்த 3 ஆண்டுகளில் ரூ.27 ஆயிரம் கோடியில், 371 அறிவிப்புகளால் 2 கோடியே 59 லட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்று வேளாண்மை - உழவர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலுரை வருமாறு :-

உழவே தலை என்று சொன்ன அய்யன் வள்ளுவருக்கும் முதன்முதலாக வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கியவரும் களம் காண்பான் வீரன் என்றால் நெற்களம் காண்பான் உழவன் மகன். என்று பாடியதோடு ஆட்சிக்கு வந்த ஐந்து முறையும் உழவர்களுக்காகவே ஆட்சியை நடத்திய தமிழ் தலைமகனாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு ஆண்டில் அவரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய முத்தமிழறிஞரின் முன் வளர்ந்த முதல்வரே! ஆட்சிப் பொறுப்பேற்று அனைவரின் மனதை வென்றதோடு நாற்பதையும் வென்றெடுத்து மக்கள் முதல்வனாய் வலம் வரும் எங்கள் இமயமே, மக்களின் இதயமே முதலமைச்சர் அவர்களே! நீங்களே நாங்கள் வணங்கும் இயற்கை. வாழையடி வாழையாய் வந்துதித்து ஆலமரம்போல நிழல் கொடுத்து செங்கரும்பு போல் வாய் இனித்து செந்நெல்போல் வயிறு நிறைத்து முக்கனியைப் போலச் சுவை கூட்டி காய்கறிகளின் அத்தனை vitaminகளையும் தமிழ்நாட்டு மக்களுக்கு நித்தமும் வழங்கிக் கொண்டிருக்கும் முதல்வர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் மட்டுமல்ல நித்தமும் ஒளிரும் உதயசூரியனும் நீங்களே! உங்களுக்கு எனது சூரிய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவையை வழிநடத்தும் பேரவைத் தலைவரே! எங்களை வழிநடத்தும் அவை முன்னவரே! மக்கள் மீது உணர்வு கொண்டு உத்திகள் பல வகுத்து இளையோரை முன்னேற வழிநடத்தும் எங்களின் சின்னவரே! எனது சக அமைச்சர் பெருமக்களே! மூத்த அமைச்சர் பெருமக்களே! உடன்பிறவா அவை உறுப்பினர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கம்.

### மூன்று ஆண்டுகளில் முத்தான திட்டங்கள்!

மூன்று ஆண்டுகளில் முத்தான திட்டங்கள் ஏராளம் ஏராளம். அதன் பயன்களோ தாராளம் தாராளம். விதைப்பு முதல் விற்பனை வரை வகுத்திட்டோம் பல திட்டம். விளைச்சலில் விண்ணை முட்டி விவசாயிகளின் மனதைத் தொட்டோம். எனக்கு மட்டும் இரண்டு வாய்ப்பு தந்துள்ளார் தலைவர் அவர்கள். வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தும் பேசினேன். வேளாண் மானியக் கோரிக்கையை தாக்கல் செய்தும் பேசுகிறேன். இந்த ஒன்றே போதும் வேளாண்மைத் துறையையும், உழவர்களையும் உயிராக முதலமைச்சர் அவர்கள் எப்படி கண்போலக் காத்து வருகிறார் என்பதை உணர்த்துவதற்கு! இன்றைய தினம் இந்த சட்டமன்றக் கூட்டத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பாராட்டித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மக்களும் பாராட்டுகின்றார்கள். ஏனென்றால் இந்த மூன்றாண்டு காலத்தில் எந்தவித விவசாயிகளும் போராட்டத்திற்கு வராமலேயே ஆட்சி நடத்துகின்றார் நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நம்முடைய சாதனைகள். இன்னும் சொல்லப்போனால் தனி நிதிநிலை அறிக்கை கொடுத்ததனுடைய பலன் விவசாயிகள் ரோட்டுக்கு வந்து அங்கே போராட்டம் நடத்தக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால், கடந்த ஆட்சியில் பார்த்தால் எப்போது பார்த்தாலும் போராட்டம், போராட்டமென்று விவசாயிகளுக்கு இதே போராட்டம். வாழ்வோடு போராட்டம். அத்தகைய நிலை மாறி இன்றைய தினம் விவசாயிகள் இன்னும் சொல்லப் போனால் பட்ஜெட்டைத் தயார் செய்வதற்கு நம் முதல்வர் அவர்கள் விவசாயிகளைச் சந்திக்க வேண்டும். தமிழகம் முழுவதுமுள்ள விவசாய சங்கங்களின் விவசாய உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை அறிந்து அதற்குரிய திட்டம் வகுக்க வேண்டு மென்று எங்களுக்கு அறிவுறுத்தியதன் பலனாக ஆண்டுதோறும் பட்ஜெட் போடும்போதுதான் அங்கே மக்களை, விவசாயிகளைச் சந்தித்து, அனைத்துப் பயிர்களைச் செய்கின்ற விவசாயிகளைச் சந்தித்து, அவர்களுடைய கருத்துகளை உள்வாங்கி அந்த நிதிநிலை அறிக்கையைக் கொடுத்ததன் பலனாக இன்றைய தினம் போராட்டம் இல்லை. இப்போதுகூட ஒரு கோரிக்கைதான் வைத்தார்கள். போராடவில்லை. எங்களுடைய நிலங்களை விவசாயிகள் கிராமந்தோறும் அதிகாரிகள் பார்க்க வேண்டும். அதற்குரிய ஒரு திட்டம் நீங்கள் அறிவித்த திட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். நாங்கள் அறிவித்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கைதான். ஆக, பட்ஜெட் என்றால் கோரிக்கைகள் பல இருக்கும். ஆனால், இந்த முறை கோரிக்கைகள் அந்தளவிற்கு இல்லை. அந்தளவிற்கு விவசாயிகள் மனமாரா பாராட்டக்கூடிய அளவிற்கு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் நம்முடைய முதல்வர் அவர்கள்.

இன்றையதினம் இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்களது ஓசூர் தொகுதியில் இருக்கின்ற பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். ஆனால், எங்களுடைய தோட்டக் கலைத் துறை அதிகாரிகளின் மூலமாக அதிக அளவிலான பலன் பெறும் விவசாயிகள் நிறைந்த பகுதி அது, அந்த வகையில் அங்கு கோரிக்கைகள் குறைவு. நண்பர் ஒய். பிரகாஷ் அவர்கள் கோரிய கோரிக்கைகளையும் நிறைவேற்று வதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.

அதேபோல, தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள் budgetஐ நன்கு கரைத்துக் குடித்தவர். நாங்கள் நடத்துகின்ற விவசாயக் கூட்டங்களை அங்குதான் நடத்துவோம்; தஞ்சையில் தான் ஆரம்பிப்போம். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூட்டம் ஆரம்பிக்கும்போது, அவர் உடனிருந்து, கோரிக்கைகளை நிறைவேற்றியதற்குப் பாராட்டு தெரிவித்தார். அத்தகைய பாராட்டுகின்ற உரையை, நம்முடைய டி.கே.ஜி. நீலமேகம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அதேபோல, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த, விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களின் பகுதி முந்திரி பகுதி; பலா பகுதி. அதற்கும் பல திட்டங்கள். ஆக, இன்னும் சொல்லப்போனால் பண்ருட்டியில் பல ஆண்டுகளாக பழைய முறையிலே விளைவித்த பயிர் மரங்கள் உள்ளன. அங்கே, அதற்குப் புதிய மாற்றாக, புதிய

## 23 இலட்சத்து 80 ஆயிரம் இலவச மின் இணைப்புக்காக
## 19 ஆயிரத்து 761 கோடி ரூபாய் மானியம்!

technology உடன் துவங்க இருக்கிறோம். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அதனுடைய பலன் மக்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அவருடைய கருத்துகளையும் நாங்கள் ஏற்று செயல்படுத்துவோம். அவரும் குறை சொல்லவில்லை.

ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் விவசாயத்தைப் பற்றிப் பாராட்டினார். அதுவே ஆச்சரியம். ஏனென்றால், சென்னைக்காரர்களுக்கு விவசாயத்தைப் பற்றி அந்தளவிற்குத் தெரியாது. இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜான் எபினேசர் அவர்கள் நன்றாகப் பாராட்டிப் பேசினார்கள். அவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 1960இல் ஆரம்பிக்கப்பட்ட ஆம்பூர் சர்க்கரை ஆலை!

ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன், ஆம்பூர் என்றாலே சர்க்கரை ஆலை. அங்கே கிட்டத்தட்ட 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்க்கரை ஆலை, ஆக இப்போது அங்கே இருக்கக்கூடிய விவசாய நிலங்கள், கரும்பு விவசாயிகளினுடைய எண்ணிக்கை குறைவு. அந்த சர்க்கரை ஆலை முழுமையாக ஓடினால், ஒரு நாள் ஓட்டத்திற்குக்கூட கரும்பு கிடையாது. ஆகவே, கரும்பு பயிர் செய்த விவசாயிகளுக்கு, செய்யாறு மில் மற்றும் அருகில் உள்ள இதர மில் உள்ளிட்ட மாற்று இடங்களுக்கு, நாங்கள் அரவைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆக, அதிகமாக ஆம்பூர் பகுதியில் கரும்பு பயிரிடச் செய்தால், அரைக்கக்கூடிய அளவிலான அரவைத் திறனுக்கு, ஆண்டுதோறும் 2.5 இலட்சம் டன் அரைக்கக்கூடிய அளவிற்கு, விவசாயிகள் அங்கு கரும்பு உற்பத்திப் பெருக்கத்தை உருவாக்க வேண்டும். ஆகவே, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 3 ஆண்டுகளில் விவசாயிகளுக்குச் செய்த அறிவிப்புகளில், ரூ.27,000 கோடியில் 371 அறிவிப்புகளால், 2 கோடியே 59 இலட்சம் விவசாயிகள் அந்தத் திட்டத்தில் பயனடைந்திருக்கிறார்கள். அதேபோல, தொடர்ந்து 115 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேலாக உணவுதானிய உற்பத்தி அதிகரித்துள்ளது. அதன் பயனாக, தொடர்ந்து 200 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேலாக தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

23 இலட்சத்து 80 ஆயிரம் இலவச மின் இணைப்புக்காக 19 ஆயிரத்து 761 கோடி ரூபாய் மானியம் இதுவரை, இந்த 3 ஆண்டு காலத்தில் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, நம்முடைய கலைஞர் அவர்களால் முதல் கையெழுத்து போட்டு தொடக்கி வைத்த திட்டம் இலவச மின்சார திட்டம். கிட்டத்தட்ட 23 இலட்சத்து 80 ஆயிரம் விவசாயிகள் இலவசமாக மின் இணைப்பு பெற்று, இலவசமாக விவசாயம் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டு,



அதற்கு இந்தத் துறையின் சார்பாக, கடந்த மூன்று ஆண்டு காலத்தில், 19,761 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கி, ஒரு இலட்சத்து 69 ஆயிரம் இலவச விவசாய மின் இணைப்புகளை வழங்கி, 3 இலட்சத்து 99 ஆயிரம் ஏக்கர் கூடுதல் இறவை பயிர் அங்கே சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது.

### நெல்லுக்கான ஊக்கத்தொகை உயர்வு!

நெல்லுக்கான ஊக்கத்தொகை, சன்ன இரகத்திற்கு ரூ.107ம், பொது இரகத்திற்கு ரூ.82ம் உயர்த்தி வழங்கி, கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.986 கோடி கூடுதல் கொள்முதல் மானியமாக 16 இலட்சத்து 63 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, நாங்கள் தேர்தல் அறிக்கையில் கூறிய தொகை, இன்னும் இரண்டு ஆண்டுகளில் முழுமையாக reach ஆகிவிடும்.

அதேபோல, கரும்பு டன்னுக்கு விலை ரூ.2,750லிருந்து ரூ.3,134.75 ஆக உயர்த்தப்பட்டு, இதுவரையில் 600 கோடி ரூபாய் வழிவகை கடன் மூலமாக நிலுவையின்றி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பத்தாண்டு காலங்களில் நிலுவைத் தொகைக்காக விவசாயிகள் போராடினார்கள். விவசாயிகள் வெட்டிய கரும்புக்கு பணம் கேட்டு போராடினார்கள். ஆனால், அந்த நிலையில் தள்ளாமல், தமிழகம் முழுவதும் அவர்களுக்கு வழிவகை கடன் அரசாங்கமே கொடுத்து, விவசாயிகளுக்கு நிலுவையின்றி தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை 3.53 இலட்சம் விவசாயிகளுக்கு 625 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

வறட்சி, மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக 13.43 இலட்சம் விவசாயிகளுக்கு, ரூ.945 கோடி—13 இலட்சத்து 43 ஆயிரம் விவசாயிகளுக்கு, 945 கோடி ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்றாண்டு காலத்திலே வறட்சியாலும், மழையினாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட 945 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### ரூ.4,493 கோடி பயிர்க் காப்பீட்டுத் தொகை!

பயிர்க் காப்பீடு திட்டம். பயிர் காப்பீடு திட்டத்தின் மூலமாக 25 இலட்சத்து 60 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.4,493 கோடி பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நடப்பு குறுவை பருவத்திற்கு ஜுன் மாதம் 21லிருந்து பயிர்க் காப்பீடுத் திட்டம்காப்பீட்டு மானியம் ரூ.16.89 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2 இலட்சம் விவசாயிகளுக்குமேல் பயன்பெறுவார்கள். இந்த ஆண்டு குறுவைக்கு பயிர்க் காப்பீடுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டுகளில் 9.5 இலட்சம் டெல்டா விவசாயிகளுக்கு ரூ.198 கோடி குறுவை தொகுப்பு வழங்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 9 இலட்சத்து 50 ஆயிரம் டெல்டா விவசாயிகளுக்கு ரூ.198 கோடி குறுவை தொகுப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் ரூ.79 கோடி குறுவை தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது என்பதையும் நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

7,705 கிராம பஞ்சாயத்துகளில் ரூ.610 கோடியில் கலைஞர் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ், கிட்டத்தட்ட 27,012 ஏக்கரில் புதிதாக நிரந்தர பயிர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, ரூ.404 கோடி நிதியில் tractors, power tillers, சிறிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் இயந்திர வாடகை மையம் 31,227 எண்ணம் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, காவேரி, வெண்ணாறு மற்றும் கல்லணைக் கால்வாய் பகுதியில் மொத்தம் உள்ள 10,434 கி.மீ. அளவிற்கு C and D type கால்வாய்கள்—இவை இந்த் துறையின் மூலமாக தூர்வாரப்படுகின்ற சிறிய வாய்க்கால்கள். அந்த C and D type வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு இதுவரை 17 கோடி ரூபாய் நிதியில் 4,719 கி.மீ. நீளம் தூர்வாரப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 5,715 கி.மீ. தூர்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

அதேபோல, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய தென் மாவட்டங்களில் கிட்டத்தட்ட 2,576 ஏக்கர் பரப்பில் ரூ.3.88 கோடி நிதியில் மழை வெள்ளத்தால் விவசாய நிலங்களில் படிந்த மணல் திட்டுக்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் கொடுப்பார்கள்; இப்போது முழுமையாக 2,576 ஏக்கர் நிலப் பரப்பில்—கடந்த மழையில், திடீரென்று மழை பெய்த காரணத்தினால், அங்கே உடைப்புகள் ஏற்பட்டு, விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. அவற்றை அரசாங்கம் மூலமாகவே தூர்வாரி, சமப்படுத்தி, அவற்றை சரி செய்து, விவசாய நிலங்களில் மீண்டும் விவசாயம் செய்வதற்குரிய வாய்ப்பை முதல்வர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோல, ரூ.44 கோடியில் 125 உழவர் சந்தைகளைப் புதுப்பிக்கவும், 15 புதிய உழவர் சந்தைகளை அமைக்கவும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, கரும்பு பரப்பு 95,000 எக்டரிலிருந்து 1,37,000 எக்டராக உயர்ந்து, மொத்தம் 160 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டிருக்கிறது.

ஆக, இதுபோன்ற பல சாதனைகளை இந்த மூன்று ஆண்டு காலத்திலே செய்திருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 30 அறிவிப்புகள்

1. தமிழ்நாட்டில் மக்காச்சோள சாகுபடியை ஊக்குவிப்பதற்கான சிறப்புத் திட்டம் 18 மாவட்டங்களில் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மக்காச்சோள சாகுபடிப் பரப்பு, உற்பத்தியை அதிகரித்திட 2024-2025 ஆம் ஆண்டில் சேலம், திருப்பூர், திண்டுக்கல், பெரம்பலூர், தூத்துக்குடி, விருதுநகர், கடலூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு, விழுப்புரம், நாமக்கல், தருமபுரி, திருச்சி, அரியலூர், மதுரை, தேனி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 18 மாவட்டங்களில் மக்காச்சோள சாகுபடி சிறப்புத் திட்டம் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகள், திரவ உயிர் உரங்கள், இயற்கை உரம், நானோ யூரியா ஆகியவற்றை உள்ளடக்கிய ஆறாயிரம் ரூபாய் மதிப்பிலான 50 ஆயிரம் தொகுப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, 50 ஆயிரம் எக்டரில் மக்காச்சோள சாகுபடி ஊக்குவிக்கப்படும்.

2. உயர் தொழில்நுட்ப சாகுபடியை வேளாண் பெருமக்களிடம் ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்கிட 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மானியத்தில் பசுமைக் குடில், நிழல்வலைக் குடில்கள் அமைக்கப்படும்.

உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளான பசுமைக் குடில், நிழல் வலைக் குடில்களில் பாதுகாக்கப்பட்ட சூழலில் குடை மிளகாய், வெள்ளரி, தக்காளி, முட்டைக்கோஸ், கார்னேசன், ஜெர்பரா, ரோஜா, ஆர்கிட், ஸ்ட்ராபெர்ரி போன்ற பயிர்களை ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து உற்பத்தியையும், உற்பத்தித்திறனையும் அதிகரித்து விவசாயிகள் அதிக வருவாய் பெற்றிடும் வகையில் 2024-2025 ஆம் ஆண்டில் பசுமைக் குடில்கள், நிழல்வலைக் குடில்கள் அமைத்திட விவசாயிகளுக்கு 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

3. மழையிலிருந்து வேளாண் விளை பொருட்களைப் பாதுகாத்திட ஐந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 10 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்புக் கூடங்கள் அமைக்கப்படும்.

வேளாண் விளைபொருட்களை மழையினால் ஏற்படும் சேதங்களிலிருந்து வீணாகாமல் பாதுகாத்திட விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, திருவண்ணாமலை மாவட்டம் போளூர், கடலூர் மாவட்டம் விருத்தாசலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திருக்கோயிலூர் ஆகிய ஐந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 2024-2025 ஆம் ஆண்டில் தலா 15,000 சதுர அடியில் பாதுகாப்புக் கூடங்கள் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

4. தமிழ்நாட்டில் துவரை உள்ளிட்ட பிற பயறு வகைகளின் பரப்பு விரிவாக்கத்திற்கும் அவைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டும் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் துவரை உள்ளிட்ட பிற பயறு வகைகள் சாகுபடியினை மேலும் ஊக்கப்படுத்தி புதிதாக 30,000 ஏக்கரில் பரப்பு விரிவாக்கம் செய்யும் விதமாக சாகுபடிக்குத் தேவையான விதை, உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரக்கலவை போன்ற இடுபொருட்கள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் வாயிலாக பயறு வகைகளின் உற்பத்தித்திறனும் உயரும். இதற்கென 2024-2025 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

5. மிகச்சன்ன இரக நெற்பயிர் சாகுபடியை விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் வகையில் 2,000 மெட்ரிக் டன் மிகச்சன்ன வகை உயர் விளைச்சல் நெல் இரகங்களின் சான்று விதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட எட்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில், அதிக சந்தை விலை கொண்ட மிகச்சன்ன வகை நெல் இரகங்கள் சாகுபடியினை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்திட 2024-2025 ஆம் ஆண்டில் 2,000 மெட்ரிக் டன் மிகச்சன்ன வகை உயர் விளைச்சல் நெல் இரகங்களின் சான்று விதைகள் தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென எட்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. கோடைகாலத்தில் காய்கறிகள் விலையினைக் கட்டுக்குள் வைக்கும் விதமாக சென்னை மாநகருக்கு காய்கறி அளிக்கக்கூடிய மாவட்டங்களில் நிழல்வலைக் குடில் அமைத்து காய்கறிகள் சாகுபடியினை ஊக்குவித்து காய்கறிகளின் வரத்தினை அதிகரிக்கும் வகையில் நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

கோடைக்காலத்தில் வெப்பநிலை அதிகரிப்பினால் காய்கறி விளைச்சல் வெகுவாகக் குறைந்து விலை ஏற்றம் அடைகிறது. அத்தகைய சூழ்நிலைகளில் சென்னை மாநகருக்கு காய்கறி அளிக்கக்கூடிய செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருப்பத்தூர் போன்ற மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பில் நிழல்வலைக்குடில்கள் அமைத்து பாதுகாக்கப்பட்ட சூழலில் கத்தரி, தக்காளி, குடைமிளகாய், கீரைகள் உள்ளிட்ட காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்வது ஊக்குவிக்கப்படும். இதற்கென 2024-2025 ஆம் ஆண்டில் நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 25 முன்னணி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தேசிய அளவில் சிறந்த மேலாண்மை நிறுவனங்களில் பயின்றவர்களைத் தலைமைச் செயல் அலுவலர்களாக நியமித்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வேளாண் வணிக செயல்பாடுகளை மேம்படுத்திட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்
## 27,012 ஏக்கரில் புதிதாக நிரந்தரப் பயிர் சாகுபடி!

வேளாண் விளைபொருட்களை ஒன்று திரட்டி சந்தைப்படுத்துதல், மதிப்புக் கூட்டி விற்பனை செய்தல் போன்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் நடவடிக்கைகளுடன், காலத்திற்கேற்ப பிற வணிக நடவடிக்கைகளையும் திறம்பட மேற்கொண்டு வளர்ச்சியடையும் விதமாக, தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 25 முன்னணி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தேசிய அளவில் சிறந்த மேலாண்மை நிறுவனங்களில் பயின்றவர்களைத் தலைமைச் செயல் அலுவலர்களாக நியமித்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வேளாண் வணிக செயல்பாடுகள் மேம்படுத்தப்படும். இதற்கென மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

8. டெல்டா மாவட்டங்களில் வறட்சிக் காலங்களில் பாசன நீர்த்தேவை யினைப் பூர்த்தி செய்திடும் விதமாக தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்திட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

டெல்டா மாவட்டங்களில் வறட்சிக்காலங்களில் மக்களின் பொதுவான நீர்த் தேவைக்காகவும், கால்நடைகளின் நீர்த் தேவைக்காகவும், அருகில் உள்ள விளை நிலங்களின் நீர்ப் பாசனத் தேவையினைப் பூர்த்தி செய்திடவும் அங்குள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களைத் தூர்வாரி அதன் நீர்ப்பிடிப்புத் திறன் அதிகரிக்கப்படும். இதற்கென 2024-2025 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

9. அதிக காய்கனி வரத்துடன் செயல்பட்டுவரும் 20 உழவர் சந்தைகளில் அவற்றின் செயல்பாடுகளை மேலும் அதிகரிக்கும் விதமாக அவற்றின் கட்டமைப்பு வசதிகள் மூன்று கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் உழவர் சந்தைகளில் நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக காய்கனி வரத்து கொண்ட உழவர் சந்தைகளில் 20 உழவர் சந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விவசாயிகள், நுகர்வோர்களுக்குத் தேவையான கூடுதல் வசதிகளுடன் உழவர் சந்தைகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு பொலிவூட்டப்படும். இதற்கென 2024-2025 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

10. திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கிவரும் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா, சென்னையில் உள்ள செம்மொழிப் பூங்கா, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பாலை மரபணுப் பூங்கா ஆகியவற்றின் அடிப்படை வசதிகள் ஒரு கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

பொதுமக்களுக்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் தரும் பூங்காக்களை மேலும் எழிலூட்டும் விதமாக, 2024-2025ஆம்ஆண்டில்திருவண்ணாமலை மாவட்டம், கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவில் நீர் ஆதாரம் ஏற்படுத்துதல், குழந்தைகள் விளையாட்டுத்திடல் அமைத்தல், சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவில் நுண்ணீர்ப் பாசன வசதிகள் ஏற்படுத்துதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பாலை மரபணுப் பூங்காவில் நடைபாதைகள் சீரமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் ஒரு கோடியே இருபத்திரண்டு இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

11. தேசிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள்மூலம் விவசாயிகளுக்கு வேளாண் விளை பொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் குறித்த பயிற்சிகள் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

விவசாயிகள், அவர்கள் உற்பத்தி செய்யும் தானிய வகைகள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், காய்கறிகள், பழங்கள் போன்ற பல்வேறு வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி, மதிப்புக்கூட்டி உரிய விலையில் விற்பனை செய்திடவும், அவர்களுக்கு ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திடவும், 2024-2025 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு தேசிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மூலம் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டுதல் குறித்த பயிற்சிகள் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

12. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அலங்கார மலர்ச்செடிகள், அலங்காரத் தாவரங்களின் நாற்றுகளை உற்பத்தி செய்து வழங்கிட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

எழிலூட்டுவதற்கு அதிகம் விரும்பப்படும் ட்ரசீனா, அக்லோனீமா, போன்சாய், க்ரோடன்ஸ், ஃபில்லோடென்ட்ரான் போன்ற அலங்காரத் தாவரங்கள், ஹெலிகோனியா, அரளி, போகெய்ன்வில்லா, அடீனியம், ரோஜா, நந்தியாவட்டை போன்ற பல்வேறு அலங்கார மலர்ச்செடிகள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில் 2024-2025 ஆம் ஆண்டில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும். இதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்தில் இயங்கிவரும் காய்கறிகளுக்கான மகத்துவ மையத்தின் கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தபடும்.

காய்கறி சாகுபடி குறித்த உயர் தொழில்நுட்பப் பயிற்சிகள், வீரிய இரக காய்கறி நாற்றுகள் விநியோகம், பருவமற்ற காலங்களில் பாதுகாக்கப்பட்ட சூழலில் காய்கறி சாகுபடி போன்ற பல்வேறு தகவல்களை விவசாயிகளுக்கு வழங்கி வரும் திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில் இயங்கி வரும் காய்கறிகளுக்கான மகத்துவ மையத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், 2024-2025 ஆம் ஆண்டில் தாய்ச்செடி தொகுதி, பசுமைக்குடில், நிழல்வலைக் குடில் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

14. கரும்பில் பயறுவகைப் பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடுவதை ஊக்குவிக்க 10 மாவட்டங்களில் 5 ஏக்கர் அளவில் 400 செயல்விளக்கத் திடல்கள் 72 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்